நாட்டுக்கோழி வளர்ப்பில் பண்ணையாளர்கள் அறிந்திருக்க வேண்டிய தீவன மேலாண்மை முறைகள்

பி.என். ரிச்சர்டு ஜெகதீசன், வே. ஜெயலலிதா, கே. வீபி தாமஸ்

பொதுவாகக் கோழிகள் பராமரிப்பில் தீவனத்திற்கு மட்டுமே 75 விழுக்காடு வரை செலவாகிறது. கோழிகளுக்குத் தேவையான ஊட்டச்சத்து, தீவனத்தின் மூலம் கிடைக்கவேண்டும். நாட்டுக்கோழி வளர்ப்பு இலாபகரமாக இருக்க வேண்டுமானால் குறைந்த செலவில் உள்ளூரில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு சமச்சீர் தீவனம் தயாரித்துப் பயன்படுத்தலாம். கிராமங்களில் அறுவடைக்காலம் தவிரப் பிற நாட்களில் கோழிகளுத் தீவனம் கிடைப்பதில்லை. மேய்ச்சல் மட்டுமே கோழிகளுக்குச் சரியான ஊட்டச்சத்துகளைத் தராது. முட்டை உற்பத்தி மற்றும் இறைச்சிக்காக வளர்க்கும்போது ஊட்டச்சத்துள்ள தீவனத்தை அளிக்க வேண்டும்

- கோழிகள் வளர்ப்பில் அதிகச் செலவை ஏற்படுத்துவது தீவனமாகும்.
- அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கும் மூலப்பொருட்களைக் கொண்டு சமச்சீர் தீவனம் தயாரிக்கலாம்.
- முறையான தீவன மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் செலவைக் குறைப்பதோடு, உற்பத்தியையும் அதிகரிக்கலாம்.

கோழிகளுக்குத் தீவனத்தில் முக்கியமாக மாவுச்சத்து, கொழுப்புச்சத்து, புரதச்சத்து, நார்ச்சத்து, தாதுப்புகள், உயிர்ச்சத்து, தண்ணீர் ஆகிய ஆறு வகையான ஊட்டச்சத்துக்கள் இருக்க வேண்டும்.

மாவுச்சத்து

அன்றாட உடல் இயக்கத்திற்குத் தேவையான எரிசக்தியைக் கொடுக்கும். நாட்டுக்கோழிகள் எரிசக்தியினைக் கொண்டுதான் தங்களின் உடல் வெப்பநிலை மற்றும் அன்றாடச் செயல்களைப் பராமரிக்கவும் செய்கின்றன. கோதுமை, அரிசி, சோளம், மக்காச்சோளம் போன்ற தானியங்களில் மாவுச்சத்து அதிக அளவில் காணப்படுகிறது.

கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகப் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையம்,
திருச்சிராப்பள்ளி - 620 023.

கொழுப்புச் சத்து

சர்க்கரைப் பொருளை விடக் கொழுப்புப் பொருள் அதிக எரிசக்தியைக் கொடுக்கிறது.

கொழுப்புச் சத்து மூலம் சில இன்றியமையாத கொழுப்பு அமிலங்கள் கிடைக்கின்றன. உடலின் நோய் எதிர்ப்புச் சக்தி மற்றும் சீரான இரத்த ஓட்டத்திற்குக் கொழுப்புச் சத்து உதவுகிறது. முழு நிலக்கடலை, சோயா, மொச்சை போன்றவற்றில் கொழுப்புச் சத்து அதிகம் உள்ளது. தாவர எண்ணெய், விலங்கினக் கொழுப்பு ஆகியவற்றைத் தீவனத்தில் சேர்ப்பதால் எரிசக்திச் செறிவை அதிகரிக்கலாம்.

புரதம்

புரதச் சத்தும், சர்க்கரைப் பொருளுக்குச் சமமாக எரிசக்தி கொடுக்கக்கூடியது. உடல் வளர்ச்சி, இரத்தம் உறைதல், நோய் எதிர்ப்புச் சக்தி போன்றவை புரதப் பொருட்களால் தான் நடைபெறுகின்றன. புரதச் சத்து அதிகம் உள்ள தீவனப் பொருட்களைக் கோழிகளுக்கு இரு வகையாகப் பிரிக்கலாம்.

1. தாவரத் தீவனப் பொருட்கள்

சோயா, நிலக்கடலை, சூரியகாந்தி, எள்ளு, தேங்காய் அகியவற்றின் பிண்ணாக்குகள் தாவரப் புரத மூலப் பொருட்களாகும். இவற்றில் ஏதேனும் ஒன்று அல்லது ஒன்றிற்கும் மேற்பட்ட பிண்ணாக்குகளை 25 விழுக்காடு வரை பயன்படுத்தலாம்.

2. விலங்கினத் தீவனப் பொருட்கள்

தாவரப் புரதத்தை விட விலங்கினப் புரதத்தில் பொதுவாக அதிக அளவு புரதம், கால்சியம், பாஸ்பரஸ் ஆகியவை காணப்படும். விலங்கினப் புரதத்தில் லைசின் மற்றும் மெத்தியோனின் அதிக அளவு காணப்படும். மீன் தூள், மாமிச மற்றும் எலும்புத் தூள் முதலியன விலங்கினப் புரத மூலப் பொருட்களாகும். மீன்தூளை 10 விழுக்காட்டுக்கு மேல் சேர்க்கக் கூடாது. மீன்தூளில் உப்பு 3 விழுக்காட்டுக்கு மேல் இருக்கக் கூடாது.

நார்ச்சத்து

கோழிகளுக்கு நார்ச்சத்துப் பசுந்தீவனம் மூலம் கிடைக்கின்றது. பசுந்தீவனங்களான வேலிமசால், முயல் மசால், கீரை, புல் வகைகளை அளிப்பதால் தீவனச் செலவைக் குறைப்பதுடன் ஒன்றோடொன்று கொத்திக்கொள்ளும் பழக்கத்தைக் குறைக்கவும் உதவும்.

தாது உப்புகள்

எலும்பு வளர்ச்சி, கரு வளர்ச்சி, இரத்த உற்பத்திக்குத் தாதுப் பொருட்கள் தேவைப்படுகின்றன. தாதுப் பொருட்களின் தேவை அளவைப் பொறுத்து, தாதுப் பொருட்களைப் பெரும் ஆதாரத் தாதுப் பொருள் என்றும், நுண்ணூட்டத் தாதுப் பொருள் என்றும் பிரிக்கலாம். பெரும் ஆதாரச் சத்துப் பொருட்களில் கால்சியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், சோடியம், குளோரின், கந்தகம், மக்னீசியம் போன்ற 7 தாதுப் பொருட்கள் அடங்கும். நுண்ணூட்டத் தாதுப் பொருட்களான இரும்புச் சத்து, துத்தநாகம், தாமிரம், அயோடின், மாங்கனீசு, செலினியம் போன்றவையும் கோழிகளுக்குத் தேவை.

சுண்ணாம்புச் சத்தின் முக்கியத்துவம்

உடலின் எலும்பு வளர்ச்சிக்கும், இரத்த உற்பத்திக்கும், முட்டையின் ஓடு உருவாவதற்கும் குறிப்பாக முட்டையிடும் கோழிகளுக்குத் தீவனத்தில் சுமார் 2.5 முதல் 3.5 விழுக்காடு கால்சியம் இருக்க வேண்டும். கால்சியம் சத்து குறைவாக இருப்பின் கோழிகளின் கால்கள் வலுவிழந்து, நடக்க முடியாமல் நொண்ட ஆரம்பிக்கும்; முட்டை உற்பத்தி குறைந்து தோல் முட்டைகளை இட ஆரம்பிக்கும்

உயிர்ச் சத்துக்கள் (வைட்டமின்கள்)

உடல் ஆரோக்கியமாக வளர உயிர்ச் சத்துக்கள் உதவுகின்றன. பொதுவாக உயிர்ச்சத்துக்களை நீரில் கரைபவை, கொழுப்பில் கரைபவை என இரு வகைப்படுத்தலாம்.

கொழுப்பில் கரையும் உயிர்ச்சத்துக்கள் (வைட்டமின் ஏ, டி3, இ மற்றும் கே.) தொற்று வியாதிகள், ரிக்கெட்ஸ் மலட்டுத் தன்மை மற்றும் இரத்தக் கசிவினைத் தடுக்கும் தன்மையைப் பெற்றுள்ளன.

நீரில் கரையும் வைட்டமின்கள் (வைட்டமின் பி1, பி2, பி6, நையாசின், ஃபோலிக் அமிலம், கோலின், பி12, பேன்டோதெனிக் அமிலம் மற்றும் அஸ்கார்பிக் அமிலம்) தோல் பராமரிப்பு, சிறகுகள், சீரமைப்பு, வளர்ச்சி, இரத்த உற்பத்தி, எலும்பு வளர்ச்சி ஆகியவற்றிற்கு உதவுகின்றன.

குடிநீர்

உடல் வெப்பநிலையைச் சீராக்க, செரிமானத்திற்கு மற்றும் இரத்த ஓட்டத்திற்குத் தண்ணீர் உதவுகிறது. கோழிகளுக்கு எப்போதும் சுத்தமான தண்ணீர் அளிக்க வேண்டும்.

கலப்புத் தீவனம்

கோழிகளுக்கான ஊட்டச்சத்துகள் அடங்கிய தீவனம்

கலப்புத் தீவனத்தின் முக்கியத்துவம்

- சிறந்த உடல் வளர்ச்சி
- அதிக உற்பத்தி
- சிறந்த தீவன மாற்றத்திறன்
- அதிக இலாபம்

தீவனச் சேர்க்கைப் பொருட்கள்

தீவன நொதிகள், தீவன எதிருயிரி, நுண்மத் தாதுக் கலவை (நுண்ம உயிர்க்கலவை), உயிர்வளி இணைவு எதிர்ப்பி, தீவன அமிலமாக்கி, இரத்தக்கழிச்சல் நோய்த் தடுப்பு மருந்து, அமினோ அமிலங்கள், பூஞ்சைக் காளான் நச்சு நீக்கி (ஒட்டுவான்) ஆகியன தீவனச் சேர்க்கைப் பொருட்களாகும். தீவன மூலப்பொருட்களுடன் தீவனச் சேர்க்கைப் பொருட்களைச் சேர்ப்பதால் ஊட்டச்சத்துக் குறைபாட்டு நோய்களைத் தவிர்ப்பதுடன் கோழிகளின் உற்பத்தித்திறன் மற்றும் தீவன மாற்று விகிதத்தை அதிகரிக்கலாம்.

தீவனப் பட்டியல்

நாட்டுக் கோழிகளின் வயது மற்றும் உற்பத்தித் திறனின் அடிப்படையில் சமச்சீர் ஊட்டச்சத்துக்கள் அடங்கிய அடர் தீவனம் அளித்து, இறைச்சி மற்றும் முட்டை உற்பத்தியைப் பெருக்கலாம்.

வ. எண்	தீவன மூலப்பொருட்கள்	குஞ்சுப் பருவம் (0-8 வாரம்) - விழுக்காடு	வளரும் பருவம் (9-20 வாரம்) -விழுக்காடு	முட்டைக் கோழிப் பருவம் (20 வாரம்) - விழுக்காடு
1	மக்காச்சோளம்	26	25	34
2	கம்பு	24	24	20
3	எண்ணெய் நீக்கிய அரிசித் தவிடு	15	27	09
4	சோயா மொச்சைத் தூள்	20	05	14
5	சூர்யகாந்திப் பிண்ணாக்கு	04	11	08
6	உப்பில்லாத கருவாடு	10	07	08
7	தாது உப்புக் கலவை	01	01	02
8	டைகால்சியம் பாஸ்பேட்	0	0	01
9	கிளிஞ்சள் தூள்	0	0	04
	மொத்தம்	100	100	100

கோழிகளுக்கு அந்தந்தப் பகுதிகளில் கிடைக்கக்கூடிய மூலப்பொருட்களைக் கொண்டு பண்ணையாளர்களே அனைத்துச் சத்துக்களும் சமச்சீராக உள்ளடங்கிய தரமான தீவனத்தைத் தயாரித்து அளிக்கலாம்.

தீவிர முறையில் இறைச்சிக்காக வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகளுக்கு இரண்டு வகையான தீவனங்களை அளிக்கலாம். அவையாவன, ஆரம்பகால குஞ்சுப்பருவத் தீவனம் மற்றும் முடிவுகால தீவனம், ஆகும்.





வ. எண்	மூலப்பொருட்கள்	ஆரம்ப கால குஞ்சுப் பருவத் தீவனம் (0-30 நாட்கள்)	முடிவுகால தீவனம் (31-90 நாட்கள்) - விழுக்காடு
1.	மக்காச்சோளம்	30 கிலோ	30 கிலோ
2.	சோளம்	5 கிலோ	5 கிலோ
3.	அரிசிக் குருணை	15 கிலோ	15 கிலோ
4.	சோயாப் பிண்ணாக்கு	25 கிலோ	25 கிலோ
5.	மீன் தூள்	8 கிலோ	6 கிலோ
6.	சூரியகாந்திப் பிண்ணாக்கு	5 கிலோ	5 கிலோ
7.	அரிசித் தவிடு	9.5 கிலோ	11.5 கிலோ
8.	தாது உப்புக் கலவை	2.5 கிலோ	2.5 கிலோ
	மொத்தம்	100 கிலோ	100 கிலோ
9.	வைட்டமின் கலவை	250 கிராம்	250 கிராம்
10.	காக்சிடியோஸ்டேட்	50 கிராம்	50 கிராம்
11.	நுண்தாதுகள்	100 கிராம்	100 கிராம்

தங்கள் பகுதியில் கிடைக்கும் தீவனப் பொருட்களைக் கொண்டு கால்நடை மருத்துவர் உதவியோடு தீவனம் தயாரித்துக் கொள்வதே சிறந்தது. குறைந்த எண்ணிக்கையில் கோழிகளை வளர்க்கும்போது தாங்களே தீவனம் அரைத்துக்கொள்வது சாத்தியமற்றது. குழுவாகச் சேர்ந்து ஏதேனும் ஒரு கோழித் தீவனத் தயாரிப்பாளரை அணுகித் தீவனத்தைத் தயாரித்துக் வாங்கிக் கொள்ளலாம். அல்லது கோழிகளின் வயது மற்றும் வகை ஆகியவற்றைக் கணக்கில் கொண்டு வெளிச்சந்தையில் தீவனத்தை வாங்கிப் பயன்படுத்தலாம்.

புறக்கடைக் கோழிகளுக்குத் தீவனம் அளிக்கும் முறை

நாட்டுக்கோழிகள் வீடுகளில் கிடைக்கும் சமையலறைக் கழிவுகள், சோறு, காய்கறிகள் ஆகியவற்றுடன் உடைந்த மற்றும் உபரியான தானியங்களான நெல், அரிசி, கம்பு, சோளம், கோதுமை, அரிசிக்குருணை, தவிடு, கேழ்வரகு ஆகியவற்றை உட்கொள்கின்றன. நாட்டுக்கோழிகள் வீட்டுத் தோட்டங்களிலுள்ள பூச்சி, புழு, கரையான், எறும்பு, கீரைகள், புல், பூண்டு முதலியவற்றையும் உட்கொள்கின்றன. இவற்றை உண்பதன் மூலம் நாட்டுக்கோழிகளுக்கு ஓரளவிற்குப் புரதச்சத்து கிடைத்தாலும், அனைத்து ஊட்டச்சத்துகளும் கிடைப்பதில்லை.

கிராமங்களில் குதிரை மசால், வேலி மசால், கரையான் முதலிய புரதச்சத்து அளிக்கும் மூலப்பொருட்களைத் தீவனமாக அளிக்கின்றனர். அசோலாவும் ஒரு பரதச்சத்து மிக்க தீவனம் ஆகும். இதைப் பச்சையாகவோ நிழலில் உலர்த்தியோ கோழிகளுக்குத் தீவனமாக அளிக்கலாம். தீவனமோ அல்லது தானியமோ அளித்த பின் கரையான்களைக் கொடுக்கலாம். குஞ்சுகளுக்குக் கரையான்களைத் தீவனமாக அளிக்கக்கூடாது.

நாட்டுக்கோழி வளர்ச்சியை அதிகரிக்கும் வழிமுறைகள்

ஒரு வகைத் தீவனத்திலிருந்து மற்றொன்றுக்கு மாற்றும்போது சிறிது சிறிதாக மாற்ற வேண்டும். கோடைக்காலங்களில் குளிர்ந்த நேரங்களில் கோழிகளுக்குத் தீவனம் அளிக்க வேண்டும்.

விவசாய வேலைக்குச் செல்வோர் தங்களுக்குக் கிடைக்கும் கம்பு, அரிசி, கோதுமை, சோளம் போன்ற தானியங்களை வெளியே கடைகளுக்கு விற்காமல் கோழிகளுக்கு அளிக்கலாம். மேய்ச்சல் போக நறுக்கிய கீரைகள் மற்றும் காய்கறிகள் வழங்க வேண்டும். நாளொன்றுக்கு வீட்டிலுள்ள தானியங்கள் மற்றும் சமையலறைக் கழிவுகளுடன் 30 முதல் 40 கிராம் கலப்புத் தீவனம் அளித்தால் அதிக உற்பத்தியைப் பெறலாம்.

இவ்வாறு தீவன மேலாண்மை முறைகளைப் பின்பற்றுவதன் மூலம் கோழிப் பண்ணையாளர்கள் அதிக இலாபம் ஈட்டலாம்.

